# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.861/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அடைக்கல ததேயுஸ் | த-பெ | ராஜேந்திரன் |
| ஊர்: | : | வெற்றியூர் | | |
| வயது: | : | 59/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சமூக ஆர்வலர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.07.2026**

**எதிரி ஆஜர்.**

---

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் வெற்றியூரில் உள்ள நான்கு ரோட்டில் வசித்து சமூக ஆர்வலராக பணி செய்து வருகிறேன். எதிரியை தெரியும். கடந்த 20.02.2017 அன்று நான் வெளியூருக்கு சென்றுவிட்டேன். நான் 22.02.2017 அன்று ஊருக்கு வந்தேன். வந்தபோது நான்கு ரோட்டில் பள்ளித்தம்பம் கிராமத்தை சார்ந்த வனராஜாவும் தண்ணீர் பந்தல் கிராமத்தை சார்ந்த சபரிமுத்து என்பவரிடமும் கேட்ட போது என்னுடைய தோட்டத்தில் கல்லுக்கால்கள் பிடுங்கி இருப்பதாக சொன்னார்கள். நான் விசாரணை செய்தபோது ஆஜர் எதிரி தான் கல்லுக்கால்களை பிடுங்கிவிட்டதாக சொன்னார்கள். அதன் பின்னர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

கல்லுக்கால்கள் எப்போது பிடுங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் 20.02.2017 அல்லது 21.02.2017 ல் பிடுங்கி இருப்பார்கள். கல்லுக்கால்கள் யார் பிடுங்கியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கல்லுக்கால்கள் என்னுடைய இடத்தில் தான் ஊன்றப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் காவல் நிலையத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கல்லுக்கால்கள் பிடுங்கப்பட்டிருந்ததில் இருந்து எத்தனை நாட்கள் கழித்து புகார் அளித்தேன் என்றால் 15 நாட்கள் கழித்து கொடுத்தேன். புகார் கொடுத்தற்கான கால தாமதத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எதிரி குடும்பத்தாருக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சம்பவத்திற்கு முன்பு இருந்து 6-7 வருடங்களாக உள்ளது. கல்லுக்கால்கள் பிடுங்கியது தொடர்பாக யாரிடம் விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் வனராஜா மற்றும்

சபரிமுத்து. தாவா இடம் எங்கு உள்ளது என்றால் வெற்றியூர் நான்குரோட்டில் உள்ளது. மேற்படி இரண்டு நபர்களும் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ளவர்கள் என்றால் சரிதான். சபரிமுத்து மற்றும் வனராஜா ஆகியோர்கள் யார் என்றால் என்னிடம் விவசாய வேலைக்கு வருபவர்கள். மேற்படி இருவரும் கல்லுக்கால்களை பிடுங்கிய நபர்களை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். எத்தனை நபர்கள் பிடுங்கினார்கள் என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி விபரத்தை என்னுடைய புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகாரில் வனராஜாவும் சபரிமுத்தும் எதிரி கல்லுக்கால்களை எடுத்து சென்றதாக தான் சொல்லியுள்ளார்கள் என்றாலும் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. IG அலெக்சாண்டர் மோகன் என்பவரை தெரியுமா என்றால் அவர் சர்வீஸில் இருக்கும்போது எனக்கு தெரியும். சம்பவத்தின் போது மேற்படி நபர் சர்வீஸில் இருந்தாரா என்றால் இருந்தார். மேற்படி அலெக்சாண்டர் என்பவரின் அதிகாரத்தை பயன்படுத்தி எதிரி மீது முன் விரோதத்தின் அடிப்படையில் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. கல்லுக்கால்கள் என்னுடையது தான் என்பதற்கு மேற்படி கல்லுக்கால்களின் நீளம், அகல அடையாளங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எத்தனை கல்லுக்கால்கள் பிடுங்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் 18-19 கல்லுக்கால்கள். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.02 11:02:47 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.